செ.வெ.எண்.48 நாள்: 22.07.2020

# தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் வேடநத்தத்தில் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.5.41 கோடி செலவில் கட்டப்பட உள்ள 2 பாலங்களுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் அடிக்கல் நாட்டினார்

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் வேடநத்தத்தில் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.5.41 கோடி செலவில் கட்டப்பட உள்ள 2 பாலத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.07.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு, பாலம் கட்டுமான பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் தெரிவித்தாவது:

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப பல்வேறு சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க பல்வேறு இடங்களில் மேம்பாலம், சாலை விரிவாக்கும் பணிகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் வேடநத்தத்தில் பாளையங்கோட்டை — குறுக்குச்சாலை — அருப்புக்கோட்டை சாலையில் 57/8வது கி.மீட்டரில் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.5.41 கோடி செலவில் கட்டப்பட உள்ள 2 பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. விரைவில் இதற்கான பணிகள் துவக்கப்பட உள்ளது.

கோவிட் 19 கொரோனா வைரஸ் உலக அளவில் பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. இந்த நோய் தொற்றில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள சுய கட்டுபாடுடன் இருக்க வேண்டும். சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தியாவில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்த சுய ஊரடங்கு உத்தரவு மார்ச் 23 முதல் நீடிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தன் காரணமாக தொற்றில் இருந்து குணம் அடைந்த நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நோய் தொற்று காலத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் பாதிக்க கூடாது என்பதை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய ஊரடங்கு உத்தரவு காலத்திலும் பல்வேறு தளர்வுகளை அறிவித்து உள்ளார்கள். மேலும் நாள்தோறும்

நோய் கட்டுபாட்டு நடவடிக்கைகள் குறித்தும், தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அலுவலர்களுடன் ஆலோசனைகளை மேற்கொள்கிறார்கள். மேலும் காணொலி காட்சி மூலம் இதுவரை 7 முறைக்கும் மேலாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் கொரோனா தடுப்பு பணிகளை குறித்து ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

இந்தியாவிலே தமிழகத்தில்தான் கோவிட் 19 அதிக பரிசோதனைகள் செய்யப்படுகிறது. அனைத்து மருத்துவ கல்லூரி மருத்துவமனை, தாலுக்கா மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தனிமைப்படுத்தப்பட்ட வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழகத்தில் 355 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட வார்டு அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிக்க தயார் நிலையில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கொரோனா தொற்று காலத்தில் சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை, எளிய மக்களுக்கும், குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோன நிவாரண நிதியாக ரூ.1,000/- மற்றும் 4 மாதத்துக்கான ரேசன் பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவிலே முதல் முறையாக தமிழகத்தில்தான் பிளாஸ்மா பிரிவு சென்னையில் துவக்கப்பட உள்ளது. ஏற்கனவே இந்த பிளாஸ்மா சிகிச்சை அளித்ததில் 24 நபர்கள் குணம் பெற்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிளாஸ்மா தானம் செய்ய கருணை உள்ளத்தோடும், தாய் உள்ளளத்தோடும் முன்வர வேண்டும் என தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள்.

உடல் உறுப்பு தானம் செய்வதில் தமிழகம்தான் முதல் இடத்தில் உள்ளது. அதைப்போலவே பிளாஸ்மா தானத்திலும் முதலிடமாக வர வேண்டும். அரசுகள் பல்வேறு தளர்வுகள் அறிவித்தாலும் பொதுமக்கள் மிகவும் அவசிய வேலைக்கு மட்டுமே வெளி வர வேண்டும். சளி, காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் கால தாமதம் இல்லாமல், உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி, பொதுமக்கள் அத்தியாவசிய பணிகளுக்கு மட்டுமே வீட்லே இருந்து வெளி வர வேண்டும். அவ்வாறு வெளி வரும்போது முககவசங்கள் அணிந்து வர வேண்டும். அடிக்கடி கைகளை சோப்பால் கழுவ வேண்டும். தமிழக அரசு மேற்கொள்ளும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், ஓட்டப்பிடாரம் வட்டாச்சியர் திரு.ரகு, ஓட்டப்பிடாரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.கெலன் பொன்மணி, திருமதி.வளர்மதி, முக்கிய பிரமுகர்கள் திரு.ஞானகுருசாமி, திரு.சண்முகவேல், திரு.பால்ராஜ், திரு.போடுசாமி மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.